## இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபை - 2018

---

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு சபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு சபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என

முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் சபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- சபை அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- சபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | உரிய கணக்கீட்டு நியமத்துடன்னான இணக்கமின்மை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 01 இன் பந்தி இலக்கம் 87 இன் பிரகாரம் விரிவான வருமானக் கூற்றினுள் எவ்விதமான விசேடமான உருப்படியும் முன்வைக்கக்கூடாத போதிலும், ரூபா 996,420 தொகையான அதிவிசேட உருப்படிகள் விரிவான வருமானக்கூற்றிலும் உள்ளடக்கப்பட்டிருந்தது. | அவதானிப்புக்களின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களை முன்வைப்பதாக | விரிவான வருமானக் கூற்றினுள் எவ்விதமான விசேடமான உருப்படியும் முன்வைக்கப் படக்கூடாது |

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 16

| | | | |
|---|---|---|---|
| (i) | பந்தி இலக்கம் 07 இன் பிரகாரம் களஞ்சியத்திற்கு பொருட்களை பெற்றுக் கொண்ட நிலையான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களாக இனங்காணப்பட வேண்டிய போதிலும், பொருட்களுக்காக கொடுப்பனவு மேற்கொண்ட திகதியை அடிப்படையாக கொண்டு கணக்கு வைக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான ரூபா 1,044,033 மற்றும் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான ரூபா 417,735 தொகையான நிலையான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் உரிய காலப்பகுதியில் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டில் ஙயபந மென்பொருளினூடாக கணக்கு வைக்கும் போது இந்த நிலைமை ஏற்படாதென்பது. | நிலையான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் நிதி நிலைமைக்கூற்றில் உரிய காலப்பகுதியில் இனங்காணப்பட வேண்டும். |
| (ii) | பந்தி இலக்கம் 36 இன் பிரகாரம், காணிகளை அபிவிருத்தி செய்வதினுள் ரூபா 920,218,001 ஆன மீள்மதிப்பிடப்பட்ட சொத்துக்களும், ரூபா 40,378,715 தொகையான மீள்மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்படாத சொத்துக்களும் கட்டிட சொத்துக்களினுள் ரூபா 320,038,183 ஆன மீள்மதிப்பீட்டு சொத்துக்கள் ரூபா 160,605,637 ஆன மீள்மதிப்பீட்டிற்கு உட்படாத சொத்துக்களினுள் உள்ளடக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான இந்த சொத்துக்களின் பெறுமதி மீள்மதிப்பிடப்பட்ட பெறுமதி மற்றும் கிரயம் ஆகிய இரு அடிப்படைகளில் தயாரிக்கப்பட்டிருந்தது. | 2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக | மீள்மதிப்பீட்டின் போது உரிய சொத்தின் வகுப்பு மீள்மதிப்பிடப்பட வேண்டும். |
| (iii) | பந்தி இலக்கம் 52 இன் பிரகாரம் சொத்தொன்றின் கொண்டு செல்லும் பெறுமதி அதன் நியாயப்பெறுமதியை விஞ்சிய போதிலும் சொத்தின் கழிவுப்பெறுமதி அதன் கொண்டுசெல்லும் பெறுமதியை விஞ்சக்கூடாது. எனினும், ரூபா 412,145 கிரயமான பல்வேறு சொத்துக்களின் திரண்ட பெறுமானத்தேய்வு ரூபா 749,288 ஆக இருந்தது. | 2019 ஆம் ஆண்டின் மீள்மதிப்பீட்டின் பிரகாரம் தீர்ப்பனவு செய்யப்படும் என்பது | சொத்தொன்றின் கழிவுப் பெறுமதி அதன் கொண்டுசெல்லும் பெறுமதியை விஞ்சக்கூடாது. |

| | | |
|---|---|---|
| (இ) இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 40 இன் பிரகாரம் குத்தகை வாடகை வருமானம் பெறும் கைத்தொழில் பேட்டைகளின் ஆதனங்கள் முதலீட்டு ஆதனங்களாக தனித்தனியாக நிதிநிலைமைக் கூற்றில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | நியமத்தினை அடிப்படையாகக் கொள்ளல் தொடர்பில் விசேட அபிப்பிராயத்தினை கோரி 2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிப்பதாக | வாடகை வருமானம் பெறும் ஆதனங்கள் முதலீட்டு ஆதனங்களாக தனித்தனியாக நிதிநிலைமைக் கூற்றில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

## 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ரூபா 791,535 பெறுமதியான முதலீட்டு தன்மையிலான செலவினங்கள் கைத்தொழில் பேட்டைகளின் பராமரிப்பு செலவினங்களாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | 2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களின் திருத்துவதாக | மூலதனத் தன்மையிலான செலவினங்கள் மூலதன செலவினங்களாக கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (ஆ) மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறான ரூபா 42,340,204 பெறுமதியான நடைமுறை வேலைகள் மற்றும் அதற்காக செலுத்த வேண்டிய செலவினங்கள் நிதிநிலைமைக் கூற்றில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிப்பதற்கு முன்னர் விசேட அபிப்பிராயத்தினை வினவி அதன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக | நடைமுறை வேலை மற்றும் அதற்காக செலுத்த வேண்டிய செலவினங்கள் நிதிநிலைமக் கூற்றில் உள்ளடக்கப்பட வேண்டும். |
| (இ) கட்டிட சொத்து உருப்படிகள் சில ஏனைய சொத்துக்கள் தொகுதிக்கு மாற்றும் போது ரூபா 2,586,359 பெறுமதியான திரண்ட பெறுமானத்தேய்வு கட்டிட சொத்துக்கள் பதிவேட்டில் அகற்றப்படாத காரணத்தினால் அந்த அளவினால் கட்டிட சொத்துக்களின் கொண்டுசெல்லும் பெறுமதிக்கு சேர்க்கப்பட்டிருந்தது. | 2019 ஆம் ஆண்டின் சொத்துக்கள் பதிவேடு சரியாக சமர்ப்பிப்பதாக | கட்டிட சொத்துக்கள் பதிவேடு நாளதுவரையாக்கப்பட வேண்டும். |
| (ஈ) 2019 ஆம் ஆண்டிற்குரிய பட்டியலிடப்பட்ட ரூபா 1,106,000 தொகையான விற்பனைகள் மீளாய்வாண்டின் விற்பனை வருமானமாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | கணக்கீட்டு நியமம் 18 இன் பிரகாரம் கணக்கு வைக்கப்படுகின்றது. | மீளாய்வாண்டின் விற்பனை வருமானம் மாத்திரம் கணக்கு வைக்கப்பட வேண்டும். |

### 1.5.3 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2018 பெபர்வரி 20 ஆந் திகதிய 03/2018 இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையின் 2(11) பந்தியின் பிரகாரம் உரிய அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ளாது 60 வயதினை கடந்த பெண் உத்தியோகத்தரொருவர் சபையின் மனிதவள பணிப்பாளர் பதவிக்கு இணைத்துக் கொள்ளப்பட்டு 2016 மே மாதம் முதல் 2019 பெப்ரவரி வரை ரூபா 2,989,008 ஆன தொகையான சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்தது. | இந்த நியமனம் தொடர்பில் இலஞ்சம் மற்றும் ஊழல் தடுப்பு அதிகாரச்சட்டத்தின் கீழ் விசாரணையொன்று மேற்கொள்ளப் படுகின்றமையால் அது தொடர்பில் எடுக்கப்படும் நடவடிக்கைகளை எதிர்காலத்தில் அறிவிப்பதாக | சுற்றறிக்கையின் பிரகாரம் 60 வயதினைக் கடந்த உத்தியோகத்தர் ஒருவரின் சேவையினை பெற்றுக்கொள்ளும் போது அது தொடர்பில் அமைச்சின் செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) 2013 ஆம் ஆண்டின் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளை பூர்த்தி செய்திராத உத்தியோகத்தர் ஒருவர் சந்தைப்படுத்தல் பணிப்பாளர் பதவிக்கு இணைத்துக் கொள்ளப்பட்டு 2015 யூன் 26 ஆந் திகதி முதல் 2019 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரை ரூபா 6,558,768 தொகை சம்பளம் மற்றும் படிகளாக செலுத்தப்பட்டிருந்தது. | நேர்முகப் பரீட்சையின் பின்னர் பெற்றுக் கொண்டுள்ள பட்டம் மற்றும் தகைமைகளை பரிசோதித்து அமைச்சின் மற்றும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக | அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிடப்பட்டுள்ள உத்தியோகத்தர்களை சேவையில் இணைத்துக் கொள்ளப்பட வேண்டும் என்பதும் நேர்முகப் பரீட்சை சந்தர்ப்பத்தில் பூர்த்தி செய்துள்ள தகைமைகள் கருத்தில் கொள்ளப்பட வேண்டும். |

## 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கொடுக்கல் வாங்கல்கள்

### 1.6.1 பெற வேண்டிய தொகை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2009 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரையான காலமாக சபையின் பல்வேறு பிரிவுகளிலிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 11,530,544 | மீதிகளை தீர்ப்பனவு செய்யும் பணிகள் இடம்பெறுவதாக | பெறவேண்டிய மீதிகள் துரிதமாக அறவிடுவதற்கு அல்லது தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | தொகைக்கு உரிய மீதிகள் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2009 மற்றும் 2017 காலப்பகுதியினுள் ரூபா 8,201,353 தொகையான கைத்தொழில் பேட்டைகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய மீதிகளை அறவிட்டிருக்கவில்லை. | நிலுவை மீதிகளை துரிதமான செலுத்துமாறும் இல்லாவிடின் உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டிருந்தது. | அறவிடப்பட வேண்டிய மீதிகளை துரிதமாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | ரூபா 4,605,647 கூட்டுத்தொகையான பொருளாதார சேவைக் கட்டணங்கள், வரிசை அமைச்சிடமிருந்து பெற வேண்டிய தொகை, ஏனைய திணைக்களங்களிலிருந்து பெற வேண்டிய பணம் மற்றும் கித்துள் சந்தைப்படுத்தல் செயற்திட்டத்திலிருந்து பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய பணம் ஆகியவற்றின் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பொருளாதார சேவைக் கட்டணங்கள் சபைக்கு அட்டுறு அடிப்படையில் எடுக்கப்படுமா என்பது தொடர்பான சிக்கல் காணப்படுகின்றமையும் அமைச்சிடமிருந்து கிடைக்க வேண்டிய பணம் தொடர்பில் 2019 ஆம் ஆண்டின் போது கணக்குகளையும் சீராக்கங்களை மேற்கொள்வதற்கும் ஏனைய திணைக்களங்களிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய பணம் மற்றும் கித்துள் சந்தைப்படுத்தல் செயற்திட்டத்திலிருந்து பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய பணம் தொடர்பில் பணிப்பாளர் சபைக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக | அறவிடப்பட வேண்டிய மீதிகளை துரிதமாக அறவிடுவதற்கு அல்லது தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான ரூபா 32,035,643 தொகையான முற்பணத்தில் 2009 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையிலும் தீர்க்கப்படாத மீதி ரூபா 12,824,409 ஆகும். இந்த மீதிகளினுள் பல்வேறு செலவினங்களிலிருந்து ரூபா 6,715,710 தொகைக்காக முற்பணமாக செலுத்தப்பட்ட தொகையிலிருந்து ரூபா 4,960,541 தொகையுமாக | இந்த மீதியினை தீர்ப்பதற்கு போதுமான தகவல்கள் இல்லாதிருப்பதாக | மீதிகள் தொடர்பில் விசாரணை மேற்கொண்டு தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| ரூபா 11,676,251 கூட்டுத்தொகைக்காக ஒதுக்கமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. இலங்கை மின்சார சபையுடன் தற்போது கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்பட்டவாறு உள்ள போதிலும் காலாவதியான முற்பணங்களாக செலுத்தப்பட்டுள்ள தொகைக்காக உடைந்த இருப்பினை பெற்றுக்கொள்ள சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |

### 1.6.2 செலுத்த வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) சபைக்குச் சொந்தமான ஆதனங்களுக்காக செலுத்த வேண்டிய ரூபா 12,566,609 தொகைக்குரிய வீதவரித் தொகையை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அரச வியாபாரமாக கருதி வீதவரித் தொகையினை அறவிட்டுள்ள ஆதனங்களை அரசின் கட்டுப்பாட்டிற்கு எடுப்பதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) 2013 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளிலிருந்து முன்கொண்டுவரப்படுகின்ற ரூபா 6,347,911 கூட்டுத்தொகைக்கு உரிய செலுத்த வேண்டிய மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ரூபா 195,132 தொகைக்குரிய மீதி செலுத்தபட்டிருக்கவில்லை என்பதும் ரூபா 3,751,347 தொகைக்குரிய மீதி தொடர்பில் தேடியறிந்து பதிவுகளை மீள்திருத்துவதற்கும் எஞ்சிய மீதிகள் தொடர்பில் பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணம் 880 | லக்கம் விற்பனை நிலையத்தின் பணம் காசாளரினால் பிணை வைக்கப்பட்டிருக்க வில்லை. | துரிதமாக தீர்வொன்று வழங்கப்பட வேண்டுமென்பது | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2015 யூலை 14 ஆந் திகதிய 2015/3 இலக்கமுடைய நிதிச் சுற்றறிக்கையின் 2(ஆ) பந்தி | தோல்பொருட்கள் பிரிவின் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துவதற்குரியதாக 4 சந்தர்ப்பங்களில் ரூபா 100,000 தொகையினை விஞ்சும் வகையில் முற்பணங்கள் வழங்கப்பட்டிருந்தன. | பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.8 நிதி முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டினுள் ரூபா 27,043,402 தொகையான 3 நிலையான வைப்புக்கள் பணிப்பாளர் சபையின் அங்கீகாரமின்றி காசாக்கப்பட்டிருந்தது. | தலைவரின் அனுமதியின் அடிப்படையில் காசாக்கப்பட்டதாக | பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு முற்பணங்களை வழங்கும் போது போதியளவான மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டிராமையால் அசாதாரணமான சேமிப்புக்களை காணக்கூடியதாக இருந்ததுடன் சேமிப்புக்கள் 22 சதவீதம் முதல் 86 சதவீதம் வரையான வீச்சில் பரவலடைந்திருந்தது. | பதில் வழங்கப்பட்டிருக்க வில்லை. | மதிப்பீடுகள் செம்மையாக தயாரிக்கப்பட வேண்டும். |

## 1.9 தகவல் தொழில்நுட்ப (IT) பொதுக் கட்டுப்பாட்டு முறைமைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் கணக்கு வைப்பதற்காக “sage” மென்பொருள் பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும், அதன் இணைப்பானது களஞ்சியம் உள்ளடங்கலான ஏனைய பிரிவுகளுக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக களஞ்சியப் பொருட்களினை கட்டளையிடல் முதல் பொருட்களை களஞ்சியத்திற்கு கையளிக்கும் சந்தர்ப்பம் வரையிலான நடைமுறைக்காக இந்த மென்பொருளை பயன்படுத்தி களஞ்சிய நடவடிக்கைகளை செயற்திறனாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப் பட்டிருக்கவில்லை. | மென்பொருளின் இணைப்பினை அனைத்து பிரிவுகளுக்கும் வழங்கி அதில் உள்ள வசதிகளிலிருந்து உச்ச பயன்பாட்டினை பெற்றுக் கொள்ள வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு பெறுபேறு ரூபா 8,848,538 ஆன மிகையாக இருந்ததுடன், அதனோடு ஒத்த முன்னைய வருடத்தின் பற்றாக்குறை ரூபா 13,137,868 ஆகும். இதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 21,986,396 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு விற்பனை வருமானம் மற்றும் அரசாங்க மானியம் அதிகரித்தமை பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

### 2.2 பிரதான வருமான மற்றும் செலவின விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

| | 2017 | 2018 |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| உடைந்த இரும்பு வருமானம் | 159,591,517 | 325,738,660 |
| ஏனைய வருமானம் | 124,337,247 | 139,761,899 |
| மொத்த வருமானம் | 283,928,764 | 465,560,559 |
| நிர்வாக செலவினம் | 490,715,818 | 549,535,526 |

முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக சபையின் மொத்த வருமானம் 64 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. ரூபா 465,560,559 தொகையான மொத்த வருமானத்தில் 70 சதவீதம் அதாவது ரூபா 325,738,660 தொகை உடைந்த இரும்பு பொருட்களை விற்பனை செய்ததன் மூலம் கிடைத்த வருமானமாவதுடன் சபையின் பிரதான நோக்கங்கள் மற்றும் பணிப்பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கு உரிய பணிகளுக்கான பங்களிப்பானது 30 சதவீதம் அல்லது ரூபா 139,761,899 ஆன குறைவான மட்டத்தில் காணப்பட்டது.

### 2.3 விகிதப் பகுப்பாய்வு

| | 2017 | 2018 |
|---|---|---|
| நடைமுறை சொத்து விகிதம் | 1 : 1.4 | 1 : 1.5 |
| மொத்த இலாப விகிதம் | 34.2 | 30.59 |
| தேறிய இலாப விகிதம் | (6.17) | 0.08 |

30.59 சதவீதமான மொத்த இலாப வீதம் நிலவிய போதிலும் தேறிய இலாப வீதமானது 0.8 சதவீதமான காணப்பட்டமைக்கு ரூபா 549,535,526 தொகையான நிர்வாக செலவினம் காரணமாக அமைந்திருந்தது. எனினும், ஏனைய வருமானங்களான அரச மானியங்களின் அடிப்படையில் காலக்கழிவு பெறுமதியானது ரூபா 16,691,220 இனால் அதிகரித்தமை மற்றும் மீண்டெழும் மானியங்கள் ரூபா 17,000,000 இனால் அதிகரித்தமை சபையின் இலாபத்தன்மைக்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது. 2017 ஆம் ஆண்டின் நிலவிய ரூபா 36,675,065 தொகையான செயற்படும் மூலதமானது 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 32,389,652 வரையிலும் ரூபா 4,285,413 இனால் குறைவடைந்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட நட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) பாதுகாப்பு சேவைகளினைப் பெற்றுக்கொள்வதற்கு உரிய ஒப்பந்தமானது கையளிக்கப்படும் போது இரண்டாவது ஆகக்குறைந்த விலையினை சமர்ப்பித்த கம்பனியினால் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் மற்றும் கம்பனி அகவிதி பத்திரம் சமர்ப்பிக்கப்படாமையின் அடிப்படையில் நிராகரிக்கப்பட்டிருந்ததுடன் அதன் காரணமாக மூன்றாவது ஆகக்குறைந்த விலையினை சமர்ப்பித்த கம்பனிக்கு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டமை காரணத்தினால் சபைக்கு ரூபா 1,803,100 தொகையான நட்டமேற்பட்டிருந்தது. இரண்டாவது ஆகக்குறைந்த விலையினை சமர்ப்பித்த நிறுனத்துடன் கலந்துரையாடியிருந்தால் அந்த நட்டத்தினை குறைத்துக் கொள்ள இயலுமானதாக இருந்திருக்கும். | இரண்டாவது ஆகக்குறைந்த விலையினை சமர்ப்பிக்க விலைக் கேள்வியாளரால் ஆவணங்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகள் முன்வைக்கப்படாமை யினால் தோல்வியுற்ற விலைக் கேள்வியாளராக பரிந்துரை செய்யப்பட்டது. | நட்டங்கள் குறைக்கப்படும் வகையில் செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2006 ஆம் ஆண்டு முதல் 2012 யூலை மாதம் வரையிலும் வாழ்க்கைச் செலவினப் படி செலுத்துவதற்கான ஊழியர் நலன்புரி நிதியத்தில் கொடுப்பனவுகளை மேற்கொள்ளாமையால் மீளாய்வாண்டின் போது அந்த கடன்களை தீர்க்கும் போது ரூபா 4,313,194 தொகையான மிகைக் கட்டணத்தை செலுத்த நேர்ந்திருந்தது. | இந்த நிலைமையினை மீள ஏற்படாத வகையில் சட்டரீதியான கொடுப்பனவுகள் உரிய காலத்தில் அனுப்பிவைக்கப்பட வேண்டுமென்பது. | உரிய கொடுப்பனவுகள் அதற்குரிய காலப்பகுதிகளில் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | உடைந்த டிரான்போர்மர் கொள்வனவு செய்யும் போது பெறுமதிசேர் வரி உள்ளடங்களாக கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், ரூபா 64,747,050 தொகைக்கு கைத்தொழிலாளர்களுக்கு விற்பனை செய்யப்பட்ட உடைந்த டிரான்ஸ்போமருக்காக பெறுமதிசேர் வரி அறவிடப்படாமையினால் மீளாய்வாண்டிற்காக ரூபா 9,697,057 தொகையான நட்டமொன்று சபையினால் ஏற்க நேர்ந்திருந்தது. | 2018 ஆம் ஆண்டிற்கான பெறுமதி சேர் வரியினை அறவிடும் போது பதிவு செய்யப்பட்ட கைத்தொழிலாளர் களிடம் மாத்திரம் அறவிடப்பட்டதாகவும் கைத்தொழிலாளர் ஒருவரிடம் அறவிடப் பட்டுள்ளதாகவும் | பெறுமதிசேர் வரி அறவிடும் போது பெறுமதிசேர் வரிக்காக பதிவுசெய்தல் அவசியமற்றதென்பதும் கொள்வனவு செய்யும் போது பெறுமதிசேர் வரி செலுத்தப்படுவதால் விற்பனை செய்யும் போதும் அந்த செலுத்தப்பட்ட வரித்தொகையினை அறவிட வேண்டும். |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அரசாங்க நிறுவனங்களிலிருந்து வெளியேற்றப்டும் உடைந்த உலோகங்கள் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழிலாளர்களினை அபிவிருத்திக்கான நியாயமான அடிப்படையொன்றில் பகிரப்பட வேண்டிய போதிலும் 2018 ஆம் ஆண்டில் விநியோகிக்கப்பட 242,531 கிலோகிராம் பித்தளையில் 41% அதாவது 100,004 கிலோகிராம் கைத்தொழிலாளர் ஒருவருக்கு தலைவரின் அங்கீகாரம் மற்றும் பரிந்துரை வழங்கப்பட்டிருந்த துடன் இலங்கை மின்சார | விசேட குழுவொன்று மூலம் பரீட்சிக்கப்பட்டு அப்போதய சபையின் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பரிந்துரை மற்றும் அங்கீகாரத்தின் பிரகாரம் வழங்கப்பட்டதாகவும் | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழிலாளர்களின் கைத்தொழில் அபிவிருத்திக்காக நியாயமான அடிப்படையில் பகிரப்பட வேண்டும். |

சபையிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட 1,185 மின் மாற்றிகளில் 781 மின்மாற்றிகள் மேற்குறிப்பிட்ட பித்தளை வழங்கப்பட்ட கைத்தொழிலாளர் உட்பட இரண்டு கைத்தொழிலாளர்களுக்கு மாத்திரம் வழங்கப்பட்டிருந்தன.

**3.3 செயற்பாட்டு வினைத்திறனின்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ரோபோ கைத்தொழில்நுட்பத்திற்கான செயற்திட்டம் | | |
| (i) | இலங்கையின் கைத்தொழில்களின் செயற்பாடுகளை இயந்திரமயப்படுத்தல், செயற்திறனை மேம்படுத்தல், தரத்தை மேம்படுத்துதல் மனித தவறுகளை குறைத்தல், தொழில்நுட்ப செயற்பாடுகளுக்கு ஊன்றுகோல் போன்ற நோக்கங்களை நோக்கமாகக் கொண்டு ரோபோ தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதற்காக அமப/1424/723/039 மற்றும் 2016 ஆகஸ்ட் 07 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் அங்கீகாரம் கிடைத்தது. சபையின் கட்டிடமொன்றில் இந் நிலையம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. ஐந்தாண்டு திட்டத்தின் கீழ் ரூபா 80 மில்லியன் அரச பங்களிப்பின் பேரில் இந் நிலையத்தை தாபிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. அமைச்சரவை முன்மொழிவின் பிரகாரம் 50:50 விகிதமொன்று பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் பொது மற்றும் தனியார் பங்குடைமையுடனான கட்டுப்பாட்டுச் சபையொன்றுடன் நிலையத்தை நிர்வகிக்க வேண்டியதுடன் இதற்காக கம்பனியொன்றாக பதிவுசெய்யப்பட வேண்டிய போதிலும் 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரை கம்பனியொன்றாக பதிவுசெய்யப்படாதிருந்ததுடன் அமைச்சரவை பரிந்துரையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆராய்ச்சி அமைச்சிற்கு வர்த்தமானி மூலம் கையளிக்கப்படுவதால் பொது மற்றும் தனியார் பங்குடைமையுடனான கட்டுப்பாட்டுச் சபையொன்று மூலம் நிர்வகிக்க கூடிய கம்பனியொன்றாக பதிவு செய்வதற்கும் எதிர்வரும் நடவடிக்கைகள் எடுக்க முடியாதிருந்தாகவும் | அமைச்சரவை பரிந்துரையின் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| II | 2016 ஆம் ஆண்டு முதல் 2018 திசெம்பர் 31 வரை ரூபா 117,830,891 தொகை கைத்தொழில் மற்றும் வர்த்தக அலுவல்கள் அமைச்சின் மூலம் மூலதன மற்றும் மீண்டெழும் செலவினத்திற்காக கைத்தொழில் அபிவிருத்தி சபைக்கு வழங்கப்பட்டிருந்தது. 2019 செப்தெம்பர் வரை மொத்த செலவினம் ரூபா 118,638,671 (பெறுமதி சேர் வரி) ஆக இருந்ததுடன் உடன்படிக்கை கடப்பாட்டிற்காக மேலும் கொடுப்பனவு செய்வதற்குரிய தொகை ரூபா 24,576,958 ஆக இருந்தது. இதற்காக அமைச்சரவை அங்கீகாரமொன்றும் திருத்திய திட்டமொன்றும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்தை நிறுத்தாமல் முன்கொண்டு வரும் நோக்கில் தேவையான மேலதிக செலவினத்திற்கான ரூபா 75 மில்லியன் அமைச்சிலிருந்து கோருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக | அரசின் பங்களிப்பு ரூபா 80 மில்லியன் மற்றும் அதற்குரிய திட்டத்தை திருத்துவதற்காக அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக் கொள்ள வேண்டும். |
| III | ரூபா 40 மில்லியன் பெறுமதியான 4 ரோபோ இயந்திரங்கள் 2017 ஏப்ரல் மாதத்தில் கொள்வனவு செய்து பொருத்தப்பட்டிருந்ததுடன் 2018 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 11,626,580 ஆன அலுவலக உபகரணங்களும் செயற்திட்டத்தை செயற்படுத்தாத காரணத்தினால் 2019 ஒக்தோபர் 15 ஆந் திகதி வரை விளைவற்று காணப்பட்டது. | செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை ஆரம்பிக்க முடியாத காரணத்தினால் சொத்துக்கள் விளைவற்று காணப்பட்டதாகவும் | விஞ்ஞான தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சு மற்றும் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு ஆகிய இரண்டு அமைச்சுக்களில் மேல்மட்ட முகாமையினை பொது இணக்கப்பாட்டின் அடிப்படையில் மீண்டும் செயற்திட்டத்தை விரைவில் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| IV | செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ள கட்டிடத்தை நவீன மயப்படுத்துவதற்கான மதிப்பிடப்பட்ட தொகை ரூபா 4.5 மில்லியனாக இருந்ததுடன் அதற்காக ரூபா 29,486,450 செலவிடப்பட்டிருந்தது. மேலும் இக் கட்டிடம் அமைந்துள்ள காணியின் உரித்து சட்டரீதியாக சபைக்கு பொறுப்பேற்கப்பட்டிருக்க வில்லை. இவ்வாறான விசேடமான நிலையமொன்றை தாபிப்பதற்காக இதனை தாபிப்பதற்கு முன்னர் தேவையான பொருத்தமான சூழலொன்றை வடிவமைப்பதற்கு சபைக்கு முடியாதிருந்தது. | திட்டவட்டமான இடமொன்றை தெரிவு செய்யாமல் மதிப்பிட்டுள்ளதாகவும் காணியின் உரித்து சட்டத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்படுமென வும் | மதிப்பீட்டினை விஞ்சாத வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் காணியின் சட்ட ரீதியான உரித்தினை கையேற்பதற்கு பொருத்தமான சூழலொன்றை வடிவமைக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| V. | செயற்திட்டத்திற்குரிய முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2018 யூன் 20 ஆந் திகதிய DMS/1840 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் நியமனம் செய்யப்பட்டிருக்கவில்லை. பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் பதவி அதில் உள்ளடக்கப்படாதிருந்த போதும் செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்காக பிரதமர் அலுவலகத்தின் 2017 செப்தெம்பர் 08 ஆந் திகதிய PMO/01/ASR/CCEM/2017/01 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் பதவிக்கு உத்தியோகத்தர் ஒருவர் ஆட்சேர்க்கப்பட்டிருந்தார். மாதாந்த சம்பளம் ரூபா 725,000 மற்றும் போக்குவரத்து படிகள் உட்பட 06 மாதங்களுக்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதும் 2017 நவம்பர் 15 ஆந் திகதி முதல் 2018 திசெம்பர் மாதம் வரை 12½ மாதங்களுக்காக குறித்த பதவியில் சேவைபுரிந்து அதற்காக ரூபா 12,035,025 ஆன சம்பளம் மற்றும் படிகள் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அங்கீகாரத்திற்கு புறம்பாக சேவை புரிந்து 6½ மாத காலப்பகுதிக்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த சம்பளம் மற்றும் படிகள் ரூபா 6,401,910 ஆக இருந்தது. | பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் நேர்முகப் பரீட்சை மூலம் முறைப்படி ஆட்சேர்க்கப்பட்டுள்ள தாகவும் ஏனைய பதவியணியினரை நியமிப்பது இடைநிறுத்தியுள்ள தாகவும் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரின் சேவை நீடிப்பதற்கும் சம்பளத்திற்காக அமைச்சரவை விஞ்ஞானமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளதா கவும் | தேவையான பதவியணியினர் நியமிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் மாத்திரம் உத்தியோகத்தர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட வேண்டியதுடன் அங்கீகாரம் இன்றி ஆட்சேர்த்தல் மற்றும் சம்பளக் கொடுப்பனவு பொறுப்பான உத்தியோகத்தர் களிமிருந்து அறவிடப்பட வேண்டும். |
| VI | சபையினால் செயற்திட்டத்திற்காக மனித வள மதியுரை செயற்பாடுகள் கம்பனி பதிவு செய்வதற்காக சட்டத்தரணி சேவைகளுக்காக அமைப்பு அகவிதி தயாரித்தல் மற்றும் வியாபாரத்திட்டமொன்றை தயாரித்தல் என்பவற்றிற்காக மதியுரை நிறுவனம் மற்றும் துறைசார் நிறுவனங்களின் சேவைகளுக்கான ரூபா 1,787,828 செலவிடப்பட்டிருந்ததுடன் குறித்த சேவை பெற்றுக்கொள்வது தொடர்பாக பெறுகை நடைமுறையொன்று பின்பற்றப்பட்டிருக்கவில்லை. | மதியுரை சேவை களுக்காக நிறுவன மொன்று தெரிவு செய்யப்பட்டு அதற்கு தேவையான பெறுகை நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளதாக | பெறுகை நடைமுறையொன்று பின்பற்றப்பட வேண்டும். |
| VII | 2018 திசெம்பர் 28 ஆந் திகதிய 2013/34 ஆம் இலக்க வர்த்தமாணி பத்திரத்தின் மூலம் இந் நிலையம் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சிற்கு கையளிக்கப்பட்டுள்ளது. எனினும் 2019 | உயர்மட்ட முகாமையின் தீர்மானத்தின் பிரகாரம் பொறியியல் பிரிவின் கட்டிடமொன்றில் இந்த இயந்திரம் | செயற்திட்டத்தை விரைவாக ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்து சொத்துக்களை செயற்திறனாக |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஆகஸ்ட் 02 ஆந் திகதி அச் செயற்திட்டத்திற்குரிய ரூபா 35,788,924 இற்கு சிஎன்சி மீள் இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டு நிறுவப்பட்டிருந்தது. விவரக் குறிப்பு மதிப்பீடு செய்யும் சந்தர்ப்பத்தில் நியமனம் செய்யப்பட்டிருந்த தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் அங்கத்தவர்கள் எதிர்காலத்தில் இயந்திர பாவனையின் போது விலைகூடிய மென்பொருள் மற்றும் விசேட பொறியியலாளர் ஒருவர் இதற்காக தேவையெனவும் அவ்வாறில்லாவிட்டால் குறித்த இயந்திரம் விளைவற்ற வகையில் இருக்குமென குறிப்பிடப்பட்டிருந்தது. தேவையான மென்பொருள் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் பதவியணி ஆட்சேர்ப்பு செய்யப்படாமல் செயற்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளதாக ‘‘நவபிம’’ கட்டிடத்திற்கு வெளியே இவ்வியந்திரம் கைத்தொழில் அபிவிருத்தி சபையின் பொறியியலாளர் பிரிவின் கட்டிடமொன்றில் ஸ்தாபிக்கப்பட்டிருந்ததுடன் இது ஸ்தாபிக்கப்பட்ட திகதி முதல் இதுவரை விளைவற்றுக் காணப்பட்டது. | ஸ்தாபிக்கப்பட்டு உட்கட்டமைப்பு வசதிகள் வழங்கப்பட்டுள்ளதாக | பயன்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | I. | 18 செயற்பாட்டு கைத்தொழில் கிராமங்களின் 275 ஏக்கர் மொத்த காணியில் அளவு கைத்தொழிலாளர் களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட காணியின் அளவு 173 ஏக்கர்களாகும். அதில் சிறிதளவு சபையின் எழுச்சி கிராம அலுவலகத்திற்கும் வீதி முறைமை மற்றும் ஏனைய நிர்மாணங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும் அபிவிருத்தி செய்யப்பட்ட 72 காணித் துண்டுகள் அதாவது 10 ஏக்கர் 20 பேர்ச் மேலும் கைத்தொழிலாளர் களுக்கு பகிர்ந்தளிக்க எஞ்சியிருந்தது. அதன் பிரகாரம் கையேற்கப்பட்ட காணி அளவிற்கு ஒப்பாக பயன்படுத்தப்படும் அளவு மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. அவ்வாறு பகிர்ந்தளிக்கப்பட்ட 725 காணி துண்டுகளில் 42 துண்டுகள் தனியார் குடியிருப்புக்கு பயன்படுத்தப்பட்டுள்ள துடன் கைத்தொழிலாக பேணிச் சென்று மூடப்பட்ட அபிவிருத்தி செய்யப்பட்ட பகுதிகளின் எண்ணிக்கை 34 ஆக இருந்தது. | மொத்தக் காணியின் அளவு 275 ஏக்கர் எனவும் கைத் தொழிலாளர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட காணியின் அளவு 173 எனவும் 72 காணித் துண்டுகளை எதிர் காலத்தில் பகிர்ந்தளிக்கப்பட்ட தாகவும் தனிப்பட்ட குடியிருப்பு பயன் படுத்தியுள்ள மற்றும் கைத்தொழில்கள் மூடப்பட்டுள்ள பகுதிகளை கைத்தொழிலாளர்களின் வேண்டுகோளின் பிரகாரம் பகிர்ந்தளிப்பதாகவும் | கையேற்றப்பட்ட காணியிலிருந்து ஆகக் கூடிய பயன்பாட்டைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| II | ரூபா 2,528,307 பெறுமதியான சொத்துக்கள் 03 கைத்தொழில் கிராமங்கள் சபையின் உரித்து மற்றும் நிறுவனத்தின் கீழ் செயற்பாடாமல் இருப்பதுடன் ரூபா 24,203,318 பெறுமதியான 04 கிராமங்களில் வருமான உழைப்பு நீண்டகாலமாக நிறுத்தப்பட்டிருந்தது. எனினும் அக் கிராமங்களுக்கான 2018 ஆம் ஆண்டின் போது வருடாந்த செலவினமாக ரூபா 1,507,735 செலவிடப்பட்டிருந்தது. 14 கைத்தொழில் கிராமங்களில் 06 கிராமங்களின் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 6,419,777 ஆக இருந்தது. | சபையின் உரித்து மற்றும் நிர்வாகத்தின் கீழ் தற்போது செயற்படாத கிராமங்கள் 2019 நிதிக் கூற்றுக்கள் மூலம் சீராக்கம் செய்யப்படுவதற்காகவும் தோல்வியடைந்த கிராமங்களுக்காக தீர்மானமொன்று எடுப்பதாகவும் வருமான அதிகரிப்பு மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும் | செலவினம் குறைவடையும் வகையில் நடவடிக்கை எடுப்பதாகவும் செயற்படாத கிராமங்களை அபிவிருத்தி செய்து கைத்தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டும். |

## 3.4 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய ஆதனங்கள், பொறி மற்றும் உபகரணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 2,070,379 பெறுமதியான 289 வகையான டோனர் களஞ்சியத்தில் காணப்பட்டதுடன் அதில் ரூபா 1,421,416 பெறுமதியான 219 வகையான டோனர் 1 ஆண்டு முதல் 21 வரை பழைய இருப்பாகும். இந்த இருப்பினை தொடர்ந்தும் விநியோகிக்காமல் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தன. | உள்ளகக் கட்டுப்பாட்டின் பலவீனமாக இருப்பதால் விரைவில் சரிசெய்வதாக | தேவையான இருப்பு மட்டம் தீர்மானிக்கப்பட்டு போதியளவு இருப்பு களஞ்சியத்தில் பேணப்பட வேண்டும். |
| (ஆ) | ஹொரண கைத்தொழில் கிராமத்தின் 15 ஆம் இலக்கத்திற்குரிய 1 ரூட் 0.6 பேர்ச் அளவிலான காணிப் பகுதி உடன்படிக்கை இலக்கம் 254 இன் கீழ் 2011 ஏப்ரல் 28 ஆந் திகதி முதல் கைத்தொழிலாளர் ஒருவருக்கு குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்ததுடன் 2014 ஏப்ரல் 23 ஆந் திகதிய முதல் திருத்த வேலையாக குறிப்பிட்டு உரிய பதில் நடவடிக்கைகள் இடை நிறுத்தப்பட்டிருந்தன. உற்பத்தி செயற்பாடுகளை இடைநிறுத்தல் மற்றும் நிலுவை தொகை கொடுப்பனவு செய்யப்படாமை காரணமாக 2015 செப்தெம்பர் 08 ஆந் திகதி உடன் இரத்துச் செய்யப்பட்டிருந்ததுடன் கைத்தொழிலாளரின் வேண்டுகோளின் பிரகாரம் 2016 ஏப்ரல் 06 ஆந் திகதி மீண்டும் கைத்தொழிலாளர்களுக்கு கையளிக்கப்பட்டிருந்தது. அக் கைத்தொழிலாளரினால் இலங்கை | இதன் குத்தகை உரித்தினை MDK கம்பனிக்கு கையளிப்பதற்கு இலங்கை வங்கி நடவடிக்கை எடுத்து வருவதாகவும் கையளிப்பு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் புதிய கைத்தொழிலை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் | கைத்தொழிலை கையளித்து நிறுவன வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வங்கியிடமிருந்து பெற்றுக்கொண்ட கடனை செலுத்தாமை காரணமாக கொண்டு வங்கியினால் வரி உரித்தை கையேற்று இருந்ததுடன் 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரை இந்த ஆதனங்களை ஏனைய கைத்தொழிலா ளருக்கு கையளிக்கப்படாமல் குறைப்பயன்பாட்டுடன் காணப்பட்டது. | | |
| (இ) | கிராம அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் செயற்திட்டம் முறையாக மதிப்பீடு செய்யப்பட்டு தெரிவு செய்யப்பட்டமை மற்றும் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதில் தாமதம் காரணமாக நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் கிடைத்த ரூபா 3,051,889 தொகைகளில் கொள்வனவு செய்த ரூபா 1,547,392 பெறுமதியான உபகரணங்கள் 2019 ஒக்தோபர் வரையிலும் நலனாளிகளுக்கு பகிர்ந்தளிக்கப்படாமல் இருந்ததுடன் கைத்தொழிலாளர்களுக்காக பகிர்ந்தளிக்கும் பொருட்டு 2007 – 2010 காலப்பகுதியில் கொள்வனவு செய்த ரூபா 3,257,173 பெறுமதியான பொருட்கள் பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2018 ஆம் ஆண்டிற்குரிய நிதி ஏற்பாடு தாமதமடைந்தமை மற்றும் திவியிட நிகழ்ச்சித் திட்டத்திற்காக முழுநேரம் காலத்தை ஈடுபடுத்தியமையால் | நலனிகளை தெரிவு செய்து கொள்வனவு செய்த பொருட்களை தாமதமில்லாமல் பகிரப்படல் வேண்டும். |
| (இ) | முயற்சியாளர்களுக்கு கிராம மற்றும் மகளிர் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் அமைச்சிலிருந்து கிடைத்த ரூபா 800,000 தொகையில் 2018 பெப்ரவரி 26 ஆந் திகதி கொள்வனவு செய்த ரூபா 334,475 தொகையான பெட்டிதொகுதிகள் இயந்திரம் 2019 ஒக்தோபர் வரை பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கவில்லை. | பொது நிலையமொன்று ஆரம்பிப்பதற்கு காணியொன்று பெற்றுக் கொள்வதற்கு தாமதம் ஏற்பட்டதாக | கொள்வனவு செய்த பொருட்கள் தாமதமின்றி பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். |

## 3.5 செயற்திட்டங்கள் அல்லது மூலதன வேலைத்திட்ட தாமதங்கள்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| பானலுவ வைத்தொழில் கிராமத்தின் 1650 சதுர அளவிலான எல்லைச் சுவருக்காக போதியளவு ஆய்வொன்று இல்லாமல் மதிப்பீடு தயாரித்த காரணத்தினால் 2017 மார்ச் 28 பெறுகை குழு அங்கீகரித்த ரூபா 20,763,350 தொகையான மதிப்பீடு 1,810 சதுர அடி ரூபா 33,158,180 வரை அதிகரித்திருந்தது. மேலதிக மதிப்பீட்டிற்காக அங்கீகாரம் தாமதமடைந்திருந்தமை மற்றும் பணம் | கட்டிடத் திணைக்களத்தினால் அவ்வப்போது மதிப்பீட்டினை திருத்தம் செய்தமை மற்றும் அமைச்சு நிதி ஏற்பாடு விடுவித்தலில் தாமதம் அடிப்படையில் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததாக செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்ததாக | ஆரம்பிப்பதற்கு முன்னர் போதியளவான ஆய்வொன்றுடன் மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டுமெனவும் பணக் கொடுப்பனவு தாமதமின்றி மேற்கொள்ளப்பட வேண்டும். |

செலுத்துவதில் தாமதம் காரணமாக 2018 ஏப்ரல் 08 ஆந் திகதிய முடிவடைவதற்கு இருந்த இச் செயற்றிட்டம் இவ்வறிக்கை திகதிவரை தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தது.

**3.6 பெறுகை முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நவபிம கட்டிடத்தை பகுதிகளாக வேறாக்குவதற்கான ஒப்பந்தம் ரூபா 4,032,408 தொகைக்கு தனியார் கம்பனியொன்றுக்கு 2018 ஏப்ரல் 12 ஆந் திகதி அளிப்புச் செய்யப்பட்டு ரூபா 2,685,128 இதுவரை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. பெறுகை வழிகாட்டல் கோவையின் 6.2.2 இன் பிரகாரம் தேசிய போட்டி கேள்வி கோரலுக்காக 21 நாட்கள் வழங்குதல் 8.9.1 (அ) பிரகாரம் ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திடல் 8.7.1 இன் பிரகாரம் நிதி ஏற்பாடு உள்ளதாக 8.12.2 இன் பிரகாரம் வேலை பூர்த்திச் சான்றிதழ் வழங்குதல் மற்றும் 4.3.1(அ) இன் பிரகாரம் மொத்த கிரயம் மதிப்பீடு தயாரித்தல் என பிரிவுகளுக்கு இணங்கும் வகையில் மேற்படி செயற்பாடு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து இவ்வாறான நிலைமை ஏற்படுவதை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | பெறுகை வழிகாட்டல் கோவையின் தொடர்பில் விசேட கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென |

**3.7 மனித வள முகாமை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் வியாபார மேம்படுத்தல் உத்தியோகத்தர் பதவி கனிஷ்ட முகாமையாளர் மட்டப் பதவியொன்றாக இருப்பதுடன் 94 பதவிகளுக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. எனினும் உயர் நீதிமன்றத்தின் SC/FR64/2009 ஆம் இலக்க வழக்கு தீர்ப்பின் அடிப்படையில் 55 உத்தியோகத்தர்களுக்காக வியாபார மேம்படுத்தல் முகாமையாளர்களாக நடுத்தரமட்ட முகாமைத்துவ மட்டம் வழங்கப்பட்டிருந்தன.<br>அதன் பிரகாரம் நியாயமான திகதியான 2016 யூன் 23 ஆந் திகதி முதல் 2018 திசெம்பர் 31 வரை அண்ணளவாக ரூபா 60 மில்லியன் தொகை சம்பளமாகவும் 2018 ஆம் ஆண்டிற்காக தொழில்துறை படியாக ரூபா 2,520,000 தொகையும் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | கனிஷ்ட அல்லது நடுத்தர மட்ட முகாமையாளராக நியமிக்குமாறு வழக்கு தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளதாகவும் உத்தேச பதவியணியினர் மீளமைப்பு திட்டத்தின் மூலம் இச்சிக்கல் சீர் செய்யப்படுவதாகவும் | பதவிகளை வழங்குவதற்கு முன்னர் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். |

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (ஆ) | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடக்கப்படாத மதியுரையாளர் பதவிக்காக உத்தியோகத்தரொருவர் 2015 ஆம் ஆண்டு முதல் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு அத்திகதி முதல் சம்பளம் மற்றும் படிகளை ரூபா 1,066,462 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | பதிலளிக்கப்பட்டிருக்க வில்லை. | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளங்காத பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு செய்யக்கூடாது. |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், நிதிக்கூற்றுக்கள் 2019 யூலை 27 ஆந் திகதியே சமர்ப்பித்திருந்தது | பதிலளிக்கப்பட்டிருக்க வில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாடொன்றை தயாரித்து பேணிசெய்வதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் அதிகாரத்தன்மை தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் 38(2) பிரிவின் பிரகாரம் ஆட்சேர்ப்பு எழுத்துமூலம் மேற்கொண்டு அதன் பிரதியொன்றை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதும் அவ்வாறான தகவலொன்று அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்பட்டிருக்க வில்லை. | கணக்காய்வுச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 4.3 வருடாந்த செயல்நடவடிக்கைத்திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் சகல நோக்கங்களும் நிறைவேற்றப்படும் வகையில் செயல்நடவடிக்கைத்திட்டம் தயாரிக்கப்படாதிருந்ததுடன் பிரதான செயலாற்றல் குறிகாட்டலை நோக்கி அடைந்து கொள்வது பலவீனமான மட்டத்தில் காணப்பட்டது. நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதை பிரதானமாக கொண்டு செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்ததுடன் புதிய தொழில்நுட்ப முறைமைகளை மேம்படுத்துவது தொடர்பில் விசேட கவனம் செலுத்த வேண்டும் | பதிலளிக்கப்பட்டிருக்க வில்லை. | சபையின் நோக்கங்கள் நிறைவேற்றப்படும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 4.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| திறைசேரியிடமிருந்து அமைச்சிலிருந்தும் சபையின் சகல வருமானம் உட்பட சகல வருமானங்கள் மற்றும் மூலதனம் செலவினங்கள் உள்ளடக்கப்பட்டு வருடாந்த பாதீடு தயாரிக்கப்பட்டிருந்ததுடன் பொது திறைசேரியிடமிருந்து கிடைத்த ரூபா 65.4 மில்லியனான பணத்திற்காக மாத்திரம் மூலதனப் பாதீடு தயாரிக்கப்பட்டிருந்தது. | பதிலளிக்கப்பட்டிருக்க வில்லை. | ஒட்டுமொத்த வருமானம் மற்றும் செலவினம் மேவுகை செய்யப்படும் வகையில் வருடாந்த பாதீடு தயாரித்து அதற்கு அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். |

### 4.5 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| இலங்கை கடற்படைக்கு சொந்தமான A520 ஆக இலக்க பழுதடைந்த கப்பலை வெட்டி அகற்றுவதற்கு சபையினால் விலைகோரல் கோரப்பட்டு ரூபா 18,341,640 தொகையான ஆகக்கூடிய கூறுவிலை சமர்ப்பித்திருந்த கூடிய கூறுவிலை சமர்ப்பித்த மஹாவெலி அயன் சென்டருக்கு 2015 சனவரி 02 ஆந் திகதி ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிந்தது. இலங்கை கடற்படையினால் ஒப்பந்தத்தை வழங்கி ஓராண்டு கழிந்ததன் பின்னரே அதாவது 2016 மார்ச் 18 ஆந் திகதி ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் சட்ட ரீதியான உரிமையொன்று இல்லாமல் பெறுகை செய்யப்பட்டு | இது தொடர்பாக மேல் மாகாண வர்த்தக நீதிமன்றத்தில் வழக்கொன்று தொடுக்கப்பட்டுள்ளதால் பதிலளிக்க முடியாது எனவும் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 5.4.14 ஆம் பிரிவின் பிரகாரம் பிணைக்குகளை தீர்வு செய்யும் பிரிவுகள் உள்ளடக்கப்பட்டு எதிர்காலத்தில் உடன்படிக்கைகள் மேற்கொள்வதாகவும் | சட்டரீதியான உரித்துடன் பெறுகை மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. 2016 ஏப்ரல் 28 ஆந் திகதி வரையில் அக்கப்பலை வெட்டி அகற்றும் நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்பட்டிருந்த போதும் 2019 ஒக்தோபர் வரையிலும் ஒப்பந்தகாரரிடமிருந்து பெற்றுக்கொண்ட ரூபா 1,620,000 தொகையான செயலாற்று பிணை விடுவிக்கப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பாக 2016 திசெம்பர் 15 ஆந் திகதி வழங்கொன்று தொடரப்பட்டிருந்தது. பெறுகை வழிகாட்டிக் கோவையின் 5.4.14 ஆம் பிரிவின் பிரகாரம் பிணைக்குகளை தீர்வு செய்யும் பிரிவு உள்ளடக்கப்பட்டு முறையான உடன்படிக்கையொன்று வராமையால் எதிர்காலத்தில் மேலதிக கிரயமொன்று செலவிட நேர்வதாக அவதானிக்கப்பட்டது.